முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : **1635**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.03.2024,** வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அன்னதான வள்ளலே தேசிகா
ஏறுமுகம் இந்த பேருலகம் அடைய
ஏழாம்படைவீடு படைத்த குருராஜா

2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 08ம் நாள், 21.03.2024, வியாழக்கிழமை)
வரமென அரங்கன் கொள்கைவழி
வையகமே ஞானலோகமாக கூடும்

3. ஆகவே அரங்கனை தொடர்ந்து உலகோர்
ஆற்றல்பட ஞானம் பயின்றுவர
வரமாக அவர்களுக்கு வரவர
வடிவேலன் என்தயவும் காட்சியும் வல்லமையும்கூடி

4. கூடியே வரும் மக்கள் எல்லாம்
குரு அரங்கனாலே ஞானிகளாகி
நாடெங்கிலும் ஞானவான்கள் தர்மவான்கள்
நிறைந்த ஞானிகள் மிகுந்த லோகமாக

5. இந்த உலகம் மாற்றம்கண்டு
நாட்டிடுவேன் உலகம் ஞானஆட்சி பெறும்
நன்மை புரிகின்ற வண்ணம்
இயற்கையும் துணை நின்று வகைபட

6. உலகமெங்கும் இயற்கை பாதுகாப்பும் கூடி
வருஷிக்கும் மழை வளம் நீர்நில வளம் என
வையகத்தில் மேன்மைகூடி இனிதே
சுப்பிரமணியர் யானும் வெளிப்பட

7. உயர்வான ஞானஆட்சிக் காலம் உதயமாகும்
அன்னதனால் உலகோர் அரங்கன் திருவடிபற்றி தொடர்ந்துவர
ஆற்றல்பட சடுதி மாற்றம் கண்டு பேருலகம்
அமைதி பாதுகாப்பு அனைத்தும் காணும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

—சுபம்—